**செ.வெ.எண்: 424** **நாள்: 27.07.2026**

## புதுக்கோட்டை மாவட்டம்

## 2026ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவுள்ள குடியரசு தின விழாவில் ஜீவன் ரக்ஷா பதக்க விருதுகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

### மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் 2026 ஆம் ஆண்டிற்கான ஜீவன் ரக்ஷா பதக்க விருதுகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதுகுறித்த செய்தியினை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.அருணா ,இ-ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில் இந்திய அரசின் சார்பாக பல்வேறு நிகழ்வுகளான நீரில் மூழ்கியவரை காப்பாற்றுதல், மின்சார விபத்துக்கள், தீ விபத்துக்கள், நிலச்சரிவு, விலங்குகளின் தாக்குதலிலிருந்து காப்பாற்றுதல், சுரங்க மீட்பு நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஈடுபட்டு மனித உயிர்களை மீட்பவர்களுக்கு கீழ்காணும் பிரிவுகளில் ஜீவன் ரக்ஷா பதக்க விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது.

1.சர்வோத்தம் ஜீவன் ரக்ஷா பதக்கம் - மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளவரை வீரத்துடன் போராடி மீட்பவர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

2.உத்தம் ஜீவன் பதக்கம் - துணிச்சலுடன் தாமதமின்றி செயல்பட்டு மிகவும் அபாயகரமாதன நிலையில் உள்ளவரை போராடி மீட்பவர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

3.ஜீவன் ரக்ஷா பதக்கம் - தனக்கு காயம் ஏற்பட்டாலும் வீரத்துடன் தாமதமின்றி போராடி உயிரைக் காப்பாற்றுபவர்களுக்கு இவ்வருது வழங்கப்படுகிறது.

மேற்காணும் 2026 ஆம் ஆண்டிற்கான ஜீவன் ரக்ஷா பதக்க விருதிற்கு https://awards.gov.in என்ற இணையதளம் வாயிலாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். இணையதளம் அல்லாது நேரிலோ அல்லது வேறு இணையதளங்களிலோ விண்ணப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் முன்னறிவிப்புகள் இன்றி நிராகரிக்கப்படும். மேலும், மேற்காணும் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க கடைசி தேதி 15.08.2026 மாலை 5.00 மணி ஆகும்.

எனவே மேற்காணும், ஜீவன் ரக்ஷா பதக்க விருதுகளுக்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சிறப்பான சாதனைகள் புரிந்தவர்கள் விண்ணப்பித்து பயன்பெற வேண்டுமாறும், மேலும் விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களை 7401703498 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளுலாம். மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai